ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2060/21 - 2018 පෙබරවාරි මස 28 වැනි බදාදා - 2018.02.28

*2060/21 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி புதன்கிழமை*

அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: BKP/ LAND/ ACQUI/ A3/ 19.
காணி அமைச்சின் கோவை இல.: 4 - 3/ 15/ 2016/ VE/ 299.

புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் 2016 ஆம் வருடத்தில் மண்சரிவின் மூலம் அகதிகளான மக்களை மீளக்குடியேற்றுவதற்காக காணி எடுத்தல் ஊருமீவல தோட்ட வாகொல்ல பிரிவு எனும் காணி, இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணித்துண்டுகளை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

சப்பிரகமுவ மாகாணத்தில், கேகாலை மாவட்டத்தின், புலத்கொஹுபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இல. 128 பி, வேகல்ல கிராம அலுவலர் பிரிவில், வேகல்ல கிராமத்தில் அமைந்துள்ள கேகாலை நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைபட இல. 3569 இல் இணைக்கப் பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 03 காணித் துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:-

**அட்டவணை**

**ஆரம்ப வரைபட இல. 3569**

| | |
|---|---|
| துண்டு இல. | : 01 - 03 |
| அளவு | : 2.3540 ஹெக்டயார் |
| காணியின் பெயர் | : ஊருமீவல தோட்டம் (வாகொல்ல பிரிவு) |
| உரிமை கோருவோரின் பெயர் மற்றும் முகவரி | : 01. காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு, கொழும்பு.<br>02. முகாமைத்துவப் பணிப்பாளர், களனிவெளி பெருந்தோட்டக் கம்பனி, இல. 400, டீன்ஸ் வீதி, கொழும்பு 10.<br>03. பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சு, 2ஆம் மாடி, செத்சிரிபாய, பத்தரமுல்லை. |

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட



*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

காரியக்காரர் மூலமாக 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 13 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு புளத்கொஹுபிட்டிய பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நட்டஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2018 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 10 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ஜே. எம். ரம்யா ஜயசுந்தர,
பிரதேச செயலாளர்,
புலத்கொஹுபிட்டிய.

பிரதேச செயலகம்,
புலத்கொஹுபிட்டிய.
2018, பெப்புருவரி 26.

3 - 639

---

திருத்தம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1909/40 மற்றும் 2015.04.08 ஆந் திகதியிடப்பட்ட அதிவிசேஷமான வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தலில் ர. 306 ஆரம்ப நில வரைபடத்தில் துண்டு இல. 22 இல் அளவு ஹெக்டயார் 0.1109 என்றும் துண்டு இல. 23 இல் அளவு ஹெக்டயார் 1.0451 என்றும் திருத்தப்படுகின்றது என்பதை அறியத்தருகின்றேன்.

ஐ. ஆர். எம். பிரதீபிகா டீ. இலுக்கும்புர,
பிரதேச செயலாளர்,
இரத்தினபுரி.

2018, பெப்புருவரி 23.

3 - 640

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: எம்எல்பீ/எல்என்டீ/எல்என்டீஏகியூ/எல் 1/39 - 6 - i.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4 - 3/6/2014/எச்டபிள்யூ/405.

மாலிம்பட பிரதேச செயலாளர் தீபிகா குமாரி குணரத்ன ஆகிய நான் தெற்கு அதிவேக வீதி கருத்திட்டதில் குறுக்கு வீதி நிர்மாணிப்பதற்காக வெளியிடப்பட்ட 2017.11.30 ஆந் திகதி இல. 2047/42 இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரச வர்த்தமானப் பத்திரிகையில் 6ஏ பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டது. 1964 ஆம் ஆண்டில் இல. 28 இன் காணி எடுத்தல் (திருத்தச்) சட்டம் திருத்தப்பட்டபடி காணி எடுத்தல் சட்டம் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் நஷ்ட ஈட்டு வினவல் 2018.03.26 ஆந் திகதி என திருத்தம் செய்யப்படுகிறது என இத்தால் மூலம் அறிவிக்கின்றேன்.

தீபிகா குமாரி குணரத்ன,
பிரதேச செயலாளர்,
மாலிம்பட.

பிரதேச செயலகம்,
மாலிம்பட,
2018, பெப்புருவரி 15.

3 - 641

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: வீ/அபி/கா/3/சீஈபி/கி. மீ. 1.0 - கி. மீ. 2.0.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4 -3/7/2016/எச்டபிள்யூ/280.

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், மஹர பிரதேச செயலாளர் பிரிவில், இஹல கரகஹமுண கிராமத்தில், இல. 248பீ, இஹல கரகஹமுண கிழக்கு கிராம அலுவலர் பிரிவில் மற்றும் அதிகாரி பத்துவ சிறு பிரிவில் அமைந்துள்ள நில அளவை அதிபதி சார்பாக கம்பஹா மாவட்ட நில அளவை அத்தியட்சகரினால் தயாரிக்கப்பட்ட ஆரம்ப வரைப்பட இலக்கம் 4038 இன் துண்டு இல. 15, காணித் துண்டு திருத்தம் செய்யப்பட்டு துண்டு இல. 52 மற்றும் 53 ஆகியன கீழ்வரும் துண்டுகளாக பிரிக்கப்பட்டுள்ளது.

01. **துண்டு இல. 52**
காணியின் பெயர்: கல்பொத்த கும்புர; விபரம்: தோட்டம், 7 வயதுடைய பலா மரம் உள்ளது; காணியின் உரிமை கோருவோர்: எம். பி. பீ. லீலாரத்ன, இல. 356, ராஜசிங்ஹ மாவத்தை, இஹல கரகஹமுண, கடவத்தை, (15 ஆவது காணித் துண்டின் பகுதி, எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); காணியின் பரப்பளவு: 0.0102 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 53**
காணியின் பெயர்: தொம்பகஹவத்தை; விபரம்: திறந்த பயனற்ற நிலம்; காணியின் உரிமை கோருவோர்: எம். பி. பீ. லீலாரத்ன, இல. 356, ராஜசிங்ஹ மாவத்தை, இஹல கரகஹமுண, கடவத்தை, (15 ஆவது காணித் துண்டின் பகுதி, எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); காணியின் பரப்பளவு: 0.0050 ஹெக்டயார்.

ஜீ. எஸ். ஐ. விமலசேன,
பிரதேச செயலாளர் மற்றும்
காணி எடுத்தல் அதிகாரி,
மஹர.

பிரதேச செயலகம்,
மஹர,
2018, சனவரி 26.

3 - 642

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.